**I.A.No.1/2026 in O.S.No.232/2018**

நாள் : 23.06.2026

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 படி, வாதுரைக்காக போடப்பட்டுள்ள வழக்கை மீள்திறப்பு (Re – open) செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது, பிராதின் 1வது தபசில்சொத்தின் ஒரு பகுதியான 2ம் தபசில் சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கு எதிரில் விளம்புகை செய்து அதற்கு அனுசரணையாக இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர்தினத்திற்குள் பிராதின் 2வது தபசில் சொத்து வாதிக்கு பிரதிவாதி சுவாதீனம் கொடுத்துப்போகும்படிக்கும், தவறும்பட்சத்தில் வாதியே இந்நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற்றுக்கொள்ளும்படிக்கும் மற்றும் பிராதின் 2வது தபசில் சொத்தில் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டுமான அமைப்புகளை இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர்தினத்திற்குள் அப்புறப்படுத்திப்போகும் படிக்கும், தவறும்பட்சத்தில் வாதியே பிரதிவாதியின் செலவில் அப்புறப்படுத்திப்போகும் வகையில் பிரதிவாதிக்கு எதிரில் ஒரு வலியுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும் பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில் பிராதின் 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை அகற்றிப் போக நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளதால் நீதிமன்ற ஆணையர் அவர்கள் சர்வேயர் உதவியுடன் பிராதின் தபசில் சொத்தைப் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது என்றும், அவ்வாறு அறிக்கை தாக்கல் செய்தால் மட்டுமே இவ்வழக்கில்
தீர்மானிக்கப்படவேண்டியது தீர் முடிவினை எட்ட முடியும் என்பதால் வாதுரைக்காக போடப்பட்டுள்ள இந்த வழக்கை மீள்திறப்பு (Re – open) செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில் எனக்கு மிகுந்த கஷ்டம் நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில், எதிருரை தாக்கல் செய்வதற்காக போதிய கால அவகாசம் வழங்கிய பிறகும், நீதிமன்றத்தில் அழைத்த பிறகும் ஆஜராகாமல் எந்தவித எடுத்துரைப்பும் கொடுக்காமல் இருந்ததால் 09.06.2026 அன்று அவர்கள் தோன்றாதரப்பினர்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மனு, மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில்

அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அசல் வழக்கில் தற்போது வாதிகள் தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், பிராது 2ம் தபசில் சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்யும் வகைக்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி வ.வி.எண்.2/2026 என்ற மனுவும், அவ்வகைக்கு அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

இருதரப்பு வாதங்கள் மனு மற்றும் எதிருரை சங்கதிகளைப் பரிசீலித்ததில், அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், பிராது தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யும் வகைக்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி வ.வி.எண்.2/2026 என்ற மனுவும், மேற்கூறிய வகையில் ஆணையரை நியமனம் செய்யும் வகைக்கு, அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவும் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்தால் தான் வ.வி.எண்.2/2026 மனுவில் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் குறித்து இறுதியாக தீர்மானிக்க முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கை மறுதிறவு செய்வதால் எதிர்மனுதாரருக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கஷ்ட நஷ்டத்தைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்களின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.2000/-ஐ வரும் 30.06.2026ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும்பட்சத்தில், இம்மனு தானாக தள்ளுபடி ஆனதாகக் கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுவை மீண்டும் அழைக்க 01.07.2026.

சகு.மா.உ..நீ.
சங்கரன்கோவில்.
23.06.2026